முருகப்பெருமான் துணை

**மகான் வராகிமிகி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண  ஜோதியே நமோ நம

**17.04.2024**, புதன்கிழமை

1. அரங்கமகா ஞான தேசிகனே
அண்ணலே ஞான குருவே
வரங்கள் தந்து உலகமக்கள்
வாழ வழிகாட்டும் குருராஜனே
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் குரோதி தகரின் திங்கள்
வரமென சதுர் திகதி கணக்கன் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 04 ம் நாள், 17.04.2024, புதன்கிழமை)
வராகிமிகி யானும் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை உலகநலமுற உரைப்பேன்
அரங்கமகான் அருள் உபதேசம்
ஆசிவழி உலகமக்கள் வர
அனைவருக்கும் அருள் துணை வரும்
4. வருகவே அரங்கமகா ஞானியரின்
வல்லமை மிக்க அன்னதான
தரும வழிகளை ஏற்றுக் கொண்டு
தானம் தனை செய்து வருக
5. வருகவே மக்களிடை சக்தியாக
வள்ளல் தன்மை பெருகி
தருமவான்கள் எனும் அடையாளம்
தரணியில் உருவாக இனிதே
6. இனிதே அரங்கன் படைகளாக
இவ்வுலகமெங்கிலும் ஞானப்படைகள்
கனிவேலவன் வழிபாட்டை செய்து
கருணை மிக்க படைகளாக
7. ஆகவே உலகமெங்கும் தேறி
அரங்கன் வந்த நோக்கம்
யுகமக்கள் அறிகின்ற வண்ணம்
உயர் ஞானம் தெளிவு கூடி

8. கூடியே கலியுக மக்களெல்லம்
குருவரங்கன் தீட்சைபலம் பெற
தேடியே திருவருளும் துணையாகி
தேசநலம் காக்கும் வண்ணம்
9. வண்ணமுடன் ஆற்றல் பெருகி
வருமுலகில் அரங்கன் வழிவழி
மண்ணுலகை காக்கும் ஞானிகளாக
மகத்துவம்பட உருவாகி நன்கு
10. உருவாகியே ஞானயுக மாற்றம்
உயர்வாய் செய்து நன்கு
முருகப்பெருமான் தலைமை வர
மனிதர்கள் ஆட்சிக்கு முடிவுகட்டி
11. முடிவுகட்டி ஞானிகள் ஆட்சி
முழுமை கண்ட ஞான ஆட்சி
நாடெங்கும் படைத்து சிறப்பர்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–